# மார்ச் 1 பேராற்றல் பிறந்த நாள்!



திராவிட முன்னேற்றக் கழகம் என்பது வெறும் அரசியல் கட்சியல்ல. அது ஒரு குடும்பம், ஒரு பண்பாடு,ஒரு வரலாறு.அந்த வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் தனது வியர்வையையும், குருதியையும் சிந்தி,இன்று தமிழகத்தின் அச்சாணியாகத் திகழ்பவர் நமது தளபதியார்.

பேரறிஞர் அண்ணா 'திராவிட நாடு' கோரிக்கையை முன்வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் கல்லக்குடி போராட்டத்தில் தண்டவாளத்தில் தலைவைத்த அந்தப் போராட்டக் களத்தின் சூட்டிலேயே பிறந்தவர் நம் தளபதியார்,ஒரு போராளியாகவே அவர் வளர்ந்தார்.

அரசியல் அதிகாரம் என்பது ஏதோ ஒரு நாளில் தட்டில் வைத்து அவருக்கு வழங்கப்பட்டதல்ல. நெருக்கடி நிலை காலத்தில், தந்தை பெரியாரின் கொள்கைவழியில்,பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில்,முத்தமிழறிஞர் கலைஞரின் கட்டளை ஏற்று, 'மிசா' சிறைக் கொடுமைகளை சந்தித்தவர் நம் தலைவர். சென்னை மத்திய சிறையில் அன்றைய ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளைத் தாங்கி நின்று வீரத் தியாகிகளின் இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு அது.சிறு வயதிலேயே சிறைக்கதவுகளைத் தகர்த்தெறிந்த தளபதியாரின் மனவுறுதிதான்,இன்று தமிழகத்தை வழிநடத்தும் பேராற்றலாக உருவெடுத்துள்ளது.

கழகத்தின் பொருளாளர்,செயல் தலைவர்,தலைவர் எனப் படிப்படியாக வளர்ந்த நம் தளபதியார், சென்னை மாநகராட்சியின் மேயராகப் பொறுப்பேற்றார் சென்னை சிங்கார சென்னை ஆகியது. இன்று அவர் முன்னெடுக்கும் 'திராவிட மாடல்' என்பது, தந்தை பெரியாரின் சமூக நீதியையும், அண்ணாவின் மாநில உரிமையையும், கலைஞரின் நவீன கட்டுமானத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தத்துவமாகும்.இந்த தத்துவம் இன்று தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக மாற்றியுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'உழைப்பு... உழைப்பு... உழைப்பு... அதுவே ஸ்டாலின்' என்று நமது கழகத் தலைவருக்கு சூட்டிய மகுடம் இன்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு இல்லத்திலும் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது. பதவியைப் பொறுப்பாகக் கருதி, ஓய்வறியாமல் உழைக்கும் தலைவரின் வேகம்,நம் போன்ற தொண்டர்களுக்கு எப்போதுமே உற்சாக டானிக்!

தந்தை பெரியார் விதைத்த விதையும்,பேரறிஞர் அண்ணா வளர்த்த கொள்கையும், முத்தமிழறிஞர் கலைஞர் காத்து வளர்த்த இயக்கமும் - இன்றைக்கு தலைவரின் தலைமையில் மக்களின் வாழ்வோடு கலந்த திராவிட மாடல் ஆட்சியாக ஐந்து ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.'திராவிட மாடல்' என்பது வெறும் ஆட்சிமுறை அல்ல, அது மனிதநேயம், சமத்துவம், சுயமரியாதை ஆகியவற்றின் உயிரோட்டம் என்பதை நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஒட்டுமொத்த தேசத்துக்கும் தெளிவாக புரியும்படி பாடம் எடுத்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொன்னான ஆட்சி காலத்தில் தமிழ்நாடு தலை நிமிர்ந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் திகழ்கிறது. கல்வி,சுகாதாரம்,தொழில், பெண்கள் முன்னேற்றம், சமூகநலம் என எந்த துறையை எடுத்தாலும் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாக உயர்ந்துள்ளது. நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மூலம் கோடிக்கணக்கான பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் வழங்கி பெண்களின் வாழ்க்கையில் ஒளியாய் விளங்கும் நமது தலைவர், மாணவ, மாணவியர் கல்வியில் சிறக்க காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம்,புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன்,மகளிர் விடியல் பேருந்து பயணம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேரடியாக நன்மைகளை சேர்த்துள்ளார்.இந்த 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் பயன்பெறாத குடும்பமோ, தனிநபரோ இல்லை என்று சொல்லக்கூடிய வகையிலே திறம்பட ஆட்சி செய்துள்ளார் நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.

கடந்த 'தமிழ்நாடு ரவுண்ட் டேபிள்' நிகழ்ச்சியில் நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முழங்கிய அந்த வார்த்தைகள் இன்றும் நம் காதுகளில் ஒலிக்கிறது. 'Numbers Speak' என்று அவர் குறிப்பிட்டதை போல, தமிழகத்தின் 11.19% பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் புள்ளிவிவரம் அல்ல,அது ஐந்தாண்டு காலம் ஓய்வின்றி உழைத்த நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இரத்தமும் வியர்வையும் கலந்த சாதனை.ஒன்றிய பாசிச பாஜக அரசு எத்தனை முட்டுக்கட்டைகள் போட்டாலும், நிதிப் பகிர்வில் அநீதி இழைத்தாலும், 'தமிழகம் இந்தியாவின் வளர்ச்சிக்கான என்ஜின்' என்பதை நிலைநாட்டிய நமது கழகத்தலைவர்,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிர்வாகத் திறமைக்கு இந்தியாவே தலைவணங்குகிறது.

தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை முடக்க நினைத்த எதிரிகளின் சதியை முறியடித்து, 'என் மக்களுக்கு நான் தரும் ஆயிரம் ரூபாயை தடுத்தால் நான் 5000 ரூபாயாக தருவேன்' என்று நெஞ்சுறுதியோடு பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான தொகையோடு கோடைக் காலச் சிறப்புத் தொகுப்பாக 5,000 ரூபாயை முன்கூட்டியே வழங்கியது கண்டு ஒட்டுமொத்த NDA கூட்டணியும் அரண்டு போனது. அதற்கும் மேலாக, 'அமையப்போகிற திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உரிமைத் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்' என்ற தலைவரின் அறிவிப்பு தாய்க்குலங்களின் வயிற்றில் பாலை வார்த்து 2026 தேர்தல் வெற்றிக்கான அச்சாரமாக அமைந்துவிட்டது.

பாதம்தாங்கி பழனிச்சாமி கருணைத்தொகை தருவதாக கூறுகிறார், திராவிட பேரரசரோ அது மகளிர் உரிமை தொகை என்றார்.மேலும் மகளிர் வெறும் பயனாளிகள் மட்டுமல்ல அவர்கள் மாநிலத்தின் வளர்ச்சியில் பங்குதாரர்கள் என்று சொல்லுவதிலேயே நாட்டு மக்களின் மேல் அவர் கொண்டுள்ள பாசத்தை நாம் அறியலாம்.

"தேர்தல் களத்தில் திமுகதான் ஹீரோ"என்று அவர் விடுத்த சூளுரையை ஏற்று, களப்பணியாற்ற தொடங்கிவிட்டது கழகத்தின் தொண்டர் படை. 75,032 வாக்குச்சாவடிகளிலும் நமது கழகக் கட்டமைப்பு இரும்புக் கோட்டையாக நிற்கிறது. எதிர்க்கட்சிகள் எத்தனை திசைதிருப்பல்களைச் செய்தாலும், தமிழக மக்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உணர்வோடு திமுக தலைமையிலான கூட்டணியின் பின்னால்தான் அணிவகுத்து நிற்கிறார்கள்,

தளபதியாரின் அனுபவமும், அவர் கடந்த வந்த கரடுமுரடான அரசியல் பாதையும், கள எதார்த்தத்தை உணர்ந்து அவர் எடுக்கும் முடிவுகளுமே 2026ல் திமுக கூட்டணிக்கு 200க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்று வரலாற்று வெற்றியை ருசிக்க செய்ய உள்ளது.2026 சட்டமன்றத் தேர்தலில், நமது தலைவரின் தலைமையிலான INDIA கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் மாபெரும் வெற்றி பெற்று, 7 ஆம் முறை கோட்டையில் வெற்றிக் கொடியை ஏற்றுவோம்!

திராவிட மாடல் 2.0 ஆட்சி என்பது உறுதி செய்யப்பட்ட வரலாறு.

அயோத்திதாசப் பண்டிதர் முதல் அண்ணல் அம்பேத்கர் வரை, பெரியார் முதல் அண்ணாகலைஞர் வரை அவர்களின் வழியில் சமூக நீதியைக் காக்கும் சமரசமற்றப் போர்வாளே!

நீங்கள் நூறாண்டு கடந்து வாழ்ந்து, இந்த தமிழகத்தை இந்தியாவின் ஒளிவிளக்காக மாற்ற வேண்டும்.

திராவிட இயக்கத்தின் கருப்புச் சட்டைப் படையில் ஒரு சாமானியத் தொண்டனாகத் தன் பயணத்தைத் தொடங்கி, இன்று இந்தியாவின் திசை காட்டும் நாயகனாக உயர்ந்து நிற்கும் தளபதியாரின் பிறந்தநாளில், கோடி சூரியப் பிரகாசத்துடன் கழக உடன்பிறப்புகளான எங்கள் வாழ்த்துகளை சமர்ப்பிக்கிறோம்!

மார்ச் 1ல் அவதரித்த மாமணியே!

நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் கருத்தியல் வாரிசே!

திராவிடப் பேரரசரே!

உமக்கு ஒரு ராயல் சல்யூட் !

'200 நிச்சயம்! 200க்கும் மேல் வெல்வது லட்சியம்' என்ற தங்களின் முழக்கத்தையே கட்டளையாக ஏற்று செய்து முடிப்போம்!

வென்று காட்டுவோம்!

ஸ்டாலின் தொடரட்டும்!

தமிழ்நாடு வெல்லட்டும்!

என்றும் கழகதலைவர் வழியில்



**முனைவர்.பி.பழனியப்பன்**
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

---

### மூளைச்சாவு அடைந்து உடலுறுப்புகளை தானமாக வழங்கிய

# கோவை சிறுமி வெண்பா இல்லத்திற்கு நேரில் சென்று பெற்றோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல்!

## இறப்பிலும் புதுவாழ்வளிப்போர் போற்றுதலுக்குரியவர்கள்!

கோவை,மார்ச்.1-

மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புகளை தானம் வழங்கிய கோவையை சேர்ந்த சிறுமி வெண்பாவின் இல்லத்திற்கு நேரில் சென்று பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

உடலுறுப்புகளைக் கொடையளித்து இறவாப் புகழை எய்திவிட்ட குழந்தை வெண்பா நம் மனங்களில் நிறைந்து வாழ்வாள்.

பெற்றெடுத்த அன்பு மகளை இழந்த வலியையும் தாங்கிக் கொண்டு, மாந்தநேயத்தோடு அந்தக் குழந்தையின் உடலுறுப்புகளைக் கொடையளித்த பெற்றோர் திரு. சோமு மற்றும் திருமிகு. சுகன்யா ஆகியோருக்கு நமது அன்பு ஆறுதலாய் துணை நிற்கட்டும்!

திரு. சோமு அவர்கள் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் நிர்வாகியாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றுவதில் பெருமை கொள்கிறேன்.

உடலுறுப்புகளைக் கொடையளிப்பது குறித்து நான் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். அதேபோல், கொடையாளரின் இறுதி நிகழ்வுகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் எனக் கடந்த 23-09-2023 அன்று அறிவித்திருந்தேன். இதனைத் தொடர்ந்து, தங்களது உடலுறுப்புகளைக் கொடையளிப்போரின் எண்ணிக்கை தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மட்டுமல்ல; இந்திய மாநிலங்களிலேயே அதிகளவுக்கு அதிகரித்து வருகிறது. இதுவரையில், இறப்பிலும் பலருக்கு வாழ்வளித்த 653 பேருக்கு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அறிவியல் மனப்பான்மையோடு சிந்தித்துச் செயல்படும் தமிழ்நாடு வளரட்டும்!

இறப்பிலும் புது வாழ்வளிக்கும் இந்தக் கருணை உள்ளங்களே போற்றுதலுக்குரிய தியாகிகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### மார்ச் 1, கழகத் தலைவர் - முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

# பெரம்பலூர் மாவட்டத்தில் கழகக் கொடியேற்றி,நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

*பெரம்பலூர்,மார்ச். 1-*

*மார்ச்01, அன்று, கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு,*

*பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி, நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி,கழக அரசின் ஐந்தாண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்து கூற வேண்டும் என்று மாவட்ட நிர்வாகிகளுக்கு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அந்த அறிக்கை வருமாறு:-*

*மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. வழிகாட்டுதல்படி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க,*

*இந்தியாவில் உள்ள*



*மற்ற மாநில முதலமைச்சர்கள் பாராட்டுகின்ற வகையிலும், தமிழ்நாட்டு பொதுமக்கள் போற்றுகின்ற வகையிலும் சிறப்பாக ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா இன்று (மார்ச் 01), நடைபெறுகிறது. முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை பெரம்பலூர் மாவட்டத்தில் மார்ச் மாதம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள்,வார்டு செயலாளர்கள் அனைத்து கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடியேற்றி, நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, முதியவர்கள், ஆதரவற்ற இல்லங்களுக்கு உதவிகள் வழங்கிட வேண்டும் எனவும், பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் வீடு, வீடாக சென்று கழக அரசின் ஐந்தாண்டு சாதனைகளையும், முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் செயல்படுத்தியுள்ள திட்டங்கள் குறித்தும், வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.விற்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்தும், மீண்டும் கழக அரசு ஆட்சிக்கு வருவதற்கு துணையாக இருக்க வேண்டும் எனவும்*

*பெதுமக்களிடம் எடுத்து கூற வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---

# தாயே! தாய்த் தமிழாய் வாழ்க!

மார்ச் 1 தேதி
தமிழர் நாயகன் பிறந்தநாள் !
போராட்டம்
போராட்டக்காரனை
முத்தமிட்டு நாள் !
பெண்ணுரிமைப் பெரியார் என்று
மகளிர் கொண்டாடும் நாள் !

ஒவ்வொரு நொடியும்
உன் ஆட்சி
பலாச்சுளை !
வழிந்தோடும்
கருணையின்
பால் சுனை !
கலை உலகில்
நீ புகழ் தொட்டாய்
நாடகம்,திரைப்படம், சின்னத்திரை !
கொடியேற்றி
நீ நடந்தத்
தொலைவு
நீலத்திரை !

சாதி மத வெறியை
வேட்டையாடும்
ஈரோட்டு
வேங்கை நீ !
பாறைகளுக்குள் ஓடும்
தண்ணீர் சாலைநீ
காலைஉணவுதந்து
படிஎன்றபாடசாலை நீ !
தில்லியால்
கட்டுபடுத்த முடியாது
ஆழ்ந்தக் காற்றழுத்த
கடல் பகுதி நீ !
உன் மீது
கல் வீசுகிறவருக்கும்
இனிக்கும்
திராட்சை நீ !
இரும்பின் தொன்மை ,
பொருநை
நம் பெருமை ,என்ற
கலங்கரை விளக்கு நீ !

நெருப்பு உருக்க
சுத்தியல்
ஓங்கி அடிக்க
உருவான வாளே !
பத்தும்பகை
என்றாலும்
சுத்தம் செய்யும் நீ
வெற்றித் திருநாளே !
அது
நட்சத்திரங்கள் அல்ல
நீ தாண்டிய
அவமானங்கள் !
அவர்கள்
அவதாரங்கள்!



நீ கீழடி
ஆதாரங்கள்!
வறண்டதே இல்லை
உன் வயல்கள் !
குறைந்ததே
இல்லை
உன் மழைகள் !
உன் கால்கள்
போர்கருவி
தளவாடங்கள்!
சிகை கொற்றன்
கண்ட
தமிழித் தாங்கும்
தண்டவாளங்கள்!
தஞ்சைக்கு
காவிரி வாசல் நீ ! மதுரைக்கு
வாடி வாசல் நீ !

எவர் கையையும்
விட்டு விடாத
கைப்பேசி நீ !
சரியான முகவரியில்
நல்லதைச்சேர்க்கும்
தபால் நீ !
சமூக நோய் தடுக்கும் தடுப்பூசி
நீ !
பூக்களைக் கொண்டு
புரட்சி நடத்துகிறவன்
நீ !
குளத்தின்
ஆம்பல் கொடி நீ !
பெரியார் அண்ணா
குலத்தின்கொடிநீ !
நரிகளின்
ஊளையை
ஊதித்தள்ளும்
கர்ஜனை நீ !
வளர்பிறை
வியக்கும்
வளர் சூரியன் நீ !
தமிழ் நாடு
கூட்டணியை
அரவணைப்பதில்

அறிஞர் அண்ணா !
ஒன்றிய கூட்டணியில்
கலைஞராய் தெரிகிறாய் நீ நின்னா !

திருக்குவளை
வாசி !
மீண்டும் முதல்வராகி
பதவி ஏற்பை
வாசி !
கார்ல் மார்க்ஸ் சிலை
பொதுவுடைமைப்
பேசும்!
வி.பி.சிங் சிலை
சமூக நீதி பேசும் !
சர் ஜான் ஹுபடர் மார்சல் சிலை
சிந்து சமவெளி ஆய்வுப் பேசும் !
ஆனால் சிலைகள் உந்தன்
பெயரைப் பேசும்!

ஒவ்வொரு ஊர் சாலைக்கும் பெருமை
அங்கே
நீ களமாடியதை
எண்ணி!

மழையில் வீடு மூழ்கியது
மனக்கவலையோ?
உன்னோடு எடுத்தப் புகைப்படத்தை
எண்ணி !
திருமண நாள்
வேட்டிச் சட்டையை விட
தொட்டு மகிழ்கிறேன் நீ மேடையில்
அணிவித்தத் துண்டை எண்ணி!
பிங்க் ஆட்டோ வால்
பெண்கள் கையில்
வருவாய் கொடுக்கிறாய் !
யாவரும் வியக்கும்படி
ரூ.5000 ஆயிரம்
வங்கி மூலம்
கொடுத்தாய் !

இங்கிலாந்து
ஆக்ஸ்போர்டு
பல்கலைக்கழகத்தில்
பெரியார் படம்
திறந்தாய் !
உன்னோடு
களத்தில் இருப்பது
இருந்து பூவாசம் !
தொண்டர் குடும்பத்திற்கு
நீ தரும்10 இலட்சம்நிதி
தாய்ப் பாசம் !
அனைத்துலக
வள்ளலார் மாநாடு !
இதயமெல்லாம்
தேனின் பூக்காடு !

தூய்மைப் பணியாளர்களுக்கு
பசி போக்க
திட்டம் தந்தாய்நீ !
தோழி விடுதி
அன்புச் சோலை
அன்புக் கரங்களின்
திட்டத்தால்
நிறைந்தாய்நீ !

இலக்கைத் தொட
ஒரு ஆண்டில் 71,000 கி.மீ
(44,000 மைல்கள்)
பறக்கும்
வடமுனைஆலா பறவை
நீ !
அட்லாண்டிக் கடலில்
பெர்முடா முக்கோணத்திலும்
வெல்லும்
கப்பலோட்டி நீ !
உன்
சாதனைகள் பேசும்
இந்தோனேசியாவின் சுலவேசி குகை
ஓவியம் நீ !

வெனிசுலாவின் ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
புகழின் உயரத்தில் நீ !
4,192 திருக்கோயில்
குடமுழுக்கு நடந்தது !
திருக்கோயில் சார்பில்
2,800 திருமணங்கள் நடந்து சிறந்தது
!

இமைகளில்
சுரம் வடிப்பவன்
நீ !
அருவியாக விழுந்தவுடன்
நதியாக நடப்பவன்
நீ !
மகளிருக்காக
காத்திருக்கும்
விடியல் பயணப்
பேருந்து நீ !
வீட்டுக்கதவைத் தட்டி
கலைஞர் உரிமைத் தொகை தரும்
தாய்க்குலத்தின்
தலை மகன் நீ !
தமிழ் உட்பட ஏழு மொழி
படைப்புகளுக்கு
"செம்மொழி இலக்கிய விருது "
தமிழுக்கு முடிசூட்டினாய் நீ !
உன் சாதனைகளால்
என்றும்
முதலமைச்சர் நீ !
மொழிகளின்
தாயாய்
தமிழாய்
வாழ்க! வாழ்க! நீ !


**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க
இலக்கிய அணி



---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நடிகர் குமரி முத்து
## பிப்ரவரி 29 (2016)



**தன்னுடைய இளம் வயதிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவினைக் கேட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**நடிகவேள் எம்.ஆர்.இராதா நாடகக் குழுவில் நடித்து வந்த இவருடைய சிரிப்பே, இவரது புகழை அதிகப்படுத்தியுள்ளது.**

**கழக கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்த இவர், சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்களில் ஒருவராகவும், குணச்சித்திர நடிகருமாக திகழ்ந்தவர்**

**திரைப்படங்களில் தன்னுடைய நடிப்புத் திறனை வெளிப்படுத்தியதால் "கலைமாமணி", "கலைச்செல்வம்", ஆகிய விருதுகளைப் பெற்றவர்.**

**2014ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களால் கலைஞர் விருது பெற்றவர். பகுத்தறிவுப் பாசறையாம் திராவிடர் கழகம் இவருக்கு "பெரியார் விருது" வழங்கி கௌரவித்துள்ளது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**